1968 ஆகஸ்ட் 22] [பேரவைத் துணைத் தலைவர்]

என்றால் சபாநாயகர் அனுமதி பெற்றுத்தான் எழுப்ப வேண்டும். அனுமதி மறுக்கப்பட்ட பின்னரும் உறுப்பினர் அவர்கள் எழுந்து பேசுவது முறையாகாது.

DR. H. V. HANDE : I am not raising an adjournment motion. You have allowed the hon. Member Thiru K. Vinayakam to get up and speak about the business of the House. I want to know......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதைப் பற்றி எழுப்புவதாக இருந்தால் தலைவர் அனுமதி பெற்றுத்தான் எழுப்ப வேண்டும். தலைவர் அனுமதி பெறாமல் எழுப்புவது முறையானது அல்ல.

DR. H. V. HANDE : I want to know the views of the Hon. Chief Minister ... ...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது வேறு. விளக்கங்கள் பெறுவது என்ற முறையில் அல்ல தாங்கள் இப்போது எழுப்புகின்ற பிரச்சனை.

DR. H. V. HANDE : I am only requesting, Sir, whether it will be possible for the Hon. Chief Minister to give his views.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பாயின்ட் ஆப் ஆர்டரைப் பற்றித் தீர்ப்புச் சொல்லுகின்ற அதிகாரம், அவை நடவடிக்கைகளைப் பற்றி செய்யவேண்டிய அதிகாரம் தலைவருக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது, அமைச்சரைக் கேட்கக் கூடாது.

DR. H. V. HANDE : I am just asking the Hon. Chief Minister to give his views on the subject.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்த ஒரு பொருளைப் பற்றி விவாதிக்க தலைவருடைய அனுமதி பெற வேண்டுமென்று சொல்லுகிறேன். விதிமுறைகள் இருக்கின்றன. விதிமுறைகளுக்கு மாறாக பிரச்சினைகளை எழுப்ப முடியாது.

3. ஒற்றிவைப்புத் தீர்மானம்.

மத்திய ஊதிய வாரியத்தின் பரிந்துறைகளையும் தோட்டத் தொழிலாளர் சட்டத்தையும் கன்னியாகுமரி ரப்பர் தோட்ட முதலாளிகள் நிறைவேற்றாதது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து திரு. ஜேம்ஸ் அவர்கள் கீழ்க்கண்ட ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள் :—

" That the non-implementation of the recommendation of the Central Wage Board for the Rubber Industry and the Plantation Labour Act by the management of the Kanyakumari Rubber Plantations and the strike notice issued by about 2,000 labourers to strike work from 2nd September 1968.

தொழிலாளர்களுக்கும், முதலாளிகளுக்கும் இடையே உள்ள தகராறைத் தீர்த்துக் கொள்ள மன்றத்தைப் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது. அதற்கு வேறு வழி வகைகள் இருக்கின்றன என்ற காரணத்தாலும், எதிர்காலத்தில் வரப்போகிற ஸ்ட்ரைக் கைப்பற்றி விவாதிக்க இந்த மன்றத்தை ஒத்தி வைப்பது முறையாகாது என்ற காரணத்தாலும் இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

4. கவன ஈர்ப்பு.

சீர்காழி, செட்டி நாடு பல் தொழில் பயிற்சி பள்ளிகளில் ஆசிரியர், பணியாளர்களுக்கு சம்பளம் வழங்கப்படாமை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, டாக்டர் ஹாண்டே அவர்கள் 41-வது விதியின்கீழ் மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வருகிறார்கள்.

Dr. H. V. HANDE: I wish to call the attention of the Hon. Minister for Education and Industries to a matter of urgent public importance viz., non-payment of salaries to the teaching and non-teaching staff including employees of workshops of Srinivasa Subbaraya Polytechnic, Puttur, Sirkali and Annamalai Polytechnic, Chettinad for five months and three months respectively and the necessity to arrange for payment of salaries to the concerned directly without routing them through the management.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: சீனுவாசா சுப்பராய பல்தொழில் பயிற்சிப் பள்ளி, தஞ்சலூர் மாவட்டம் புத்தூரில் (சீர்காழி) நிறுவப்பட்டுள்ளது. அண்ணாமலைப் பல்தொழில் பயிற்சிப் பள்ளி இராமநாதபுரம் மாவட்டம், செட்டிநாட்டில் நிறுவப்பட்டுள்ளது.

பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளை நிறுவுவதற்காகும் தொடராச் செலவை மத்திய அரசும், மாநில அரசாங்கமும் பள்ளி நிர்வாகமும் 2 : 1 : 1 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொண்டனர். தொடர் செலவும் முதல் ஐந்தாண்டுகளுக்கு அதே விகிதத்தில் பகிர்ந்து கொள்ளப்பட்டது. ஐந்தாண்டுகளுக்குப் பிறகு தொடர் செலவுக்கான மத்திய அரசு உதவி நிறுத்தப்பட்டது. அதன் பின்னர், தொடர் செலவு முழுவதையும் மாநில அரசாங்கமும் பள்ளி நிர்வாகமும் மட்டுமே ஏற்று வருகின்றன. தொடர் செலவில் ஏற்படுகிற நிகர பற்றுக் குறைக்கென மாநில அரசாங்க உதவி அவ்வப்போது அதிகமாக்கப்பட்டு வந்து, 1967-68 முதல் நிகர பற்றுக்குறையில் 75 சத வீதம் மாநில அரசாங்கத்தால் ஈடு செய்யப்பட்டிருக்கிறது.

அரசாங்கம் அதிக அளவில் உதவி அளித்த போதிலும், பல் தொழில் பயிற்சிப் பள்ளிகள் சில தொடர்செலவில் தமது பங்கை வழங்க இயலாமல் உள்ளன. தொடர் செலவு ஆண்டுக்காண்டு அதிகரித்து வந்துள்ளது என்பதையும், தாங்கள் முதற்கண்